**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**ஆத்தூர்**

------

**அசல் வழக்கு எண்.52/2019**

**2026 ஆம்** வருடம் ஜுன் மாதம் 09 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராம் | ஜாதி | : | |
| த.பெ | : | தாத்தாரு | தொழில் | : | ஓய்வு, வேளாண்மைத் துறை |
| கிராமம் | : | சின்னாளபட்டி, பூஞ்சோலை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 61/2026 |
| தேதி | : | 09.06.2026 | | | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் இதற்கு முன்னர் என்ன வேலை பார்த்தீர்கள் என்றால் வேளாண்மை துறையில் வேலை பார்த்தேன். எந்த எந்த ஊரில் வேலை பார்த்தீர்கள் என்றால் வேடசந்தூர் மற்றும் ஆத்தூரில் வேலை பார்த்தேன். எந்த வருடம் ஓய்வு பெற்றீர்கள் என்றால் 2024 ல் ஓய்வு பெற்றேன். நீங்கள் எந்த ஊரில் குடியிருந்தீர்கள் என்றால் முதலில் திண்டுக்கல்லில் குடியிருந்தேன். தற்போது சின்னாளபட்டியில் குடியிருந்து வருகிறேன். திண்டுக்கல்லில் எத்தனை வருடம் குடியிருந்தீர்கள் என்றால் சுமார் 13 வருடம் குடியிருந்தேன். சின்னாளபட்டியில் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறீர்கள் என்றால் 3 வருடமாக குடியிருந்து வருகிறேன்.

வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி அவரது வீட்டை இடிக்க கூடாது என்று சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை பற்றி உங்களுக்கு அனைத்து விபரமும் தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். உயர்நீதிமன்றத்தில் நீங்கள் எதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கு மனு கொடுத்திருந்தேன். அதற்கு பின்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன்.

ஆக்கிரமிப்பு எங்கு இருந்தது என்றால் சர்வே எண்.652/13 மற்றும் சர்வே எண்.652/21 ஆகிய சர்வே எண்களில் ஆக்கிரமிப்பு இருந்தது.

ஆக்கிரமிப்பு பாதை எங்கு சென்று முடிகிறது என்றால் ஆக்கிரமிப்பு பாதை என்பது ஒரு தெருவாகும். வாதியின் முன் உரிமையாளர் எந்த அளவு பட்டா வாங்கியுள்ளார் என்றால் அளவு பற்றி எனக்கு தெரியாது. வாதியின் முன் உரிமையாளாரின் பட்டா எண்.382 ஆகும். அதன் சர்வே எண்.652 ஆகும். சர்வே எண்.652 ன் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

உயர்நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்த வழக்கு பொது நல வழக்கு என்றால் சரிதான். எவ்வளவு நாளுக்கு முன்பாக ஊரை விட்டு சென்றீர்கள் என்றால் நான் ஊரை விட்டு செல்லவில்லை. என் அம்மா இங்கு தான் இருந்தார். நான் வந்து வந்து செல்வேன். உங்களுக்கு நிரந்தர முகவரி இல்லை என்றால் சரியல்ல, தற்பொழுது நான் சின்னாளபட்டியில் இருக்கிறேன். வழக்கில் உங்களுடைய நிரந்தர முகவரி கெண்டிச்சம்பட்டி என்று நீங்கள் கூறவில்லை என்றால் சரியல்ல.

உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் திண்டுக்கல் RM colony ல் குடியிருந்து தற்போது சின்னாளபட்டியில் குடியிருந்து வருவதாக தான் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த பொது நல வழக்கில் யார் யாருக்கு பாதிப்பு என்று தனிப்பட்ட முறையில் கூறவில்லை என்றால் சரிதான். பொது மக்களுக்கு பாதிப்பு என்று கூறியுள்ளேன். நீங்கள் தாக்கல் செய்த பொது நல வழக்கில் வட்டாச்சியரிடம் மனு கொடுத்து அவர்கள் அளந்து பார்த்து ஆக்கிரமிப்பு என தெரியவந்தால் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நான் மனு கொடுத்து BDO வந்து அளந்தார்.

நீங்கள் சொல்வது போல் அவர்கள் முறைவாக அளக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கு மால் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் பாதை ஆக்கிரமிப்பு செய்ததாக மனு செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். சர்வே எண்.652/13 என்பது வருவாய்துறை ஆவணங்களின் படி சந்து என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சந்தை வாதியும் மற்ற நபர்களும் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். அவர் ஆக்கிரமிப்பு செய்து பயன்படுத்தி வந்தார்.

அந்த இடம் எத்தனை வருடமாக பாதையா இருந்தது என்றால் தொடக்கத்தில் இருந்தே பாதையாக தான் இருந்து வருகிறது. எப்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் 21.08.2014 ல் இருந்து ஆக்கிரமிப்பு செய்தார்கள். அப்போது சர்வே எண்.652/13 என்ற

இடத்தில் வாதி கிரையம் பெறும்போது தென்னை மரங்களும், வேப்ப மரங்களும் இருந்தது என்றால் சரிதான். நீங்கள் சொல்லக்கூடிய பாதையில் தான் மேற்சொன்ன மரங்கள் இருந்தது என்றால் சரிதான். உங்களுக்கு தாவா சொத்தின் அருகில் நிலம் இருக்கிறதா என்றால் அருகில் இல்லை, அந்த பகுதியில் நிலம் உள்ளது.

சர்வே எண்.652/13 க்கு மேற்கு திசையில் உங்களுடைய நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.652/13 க்கு மேற்கே உங்கள் நிலம் மட்டும் தான் உள்ளது என்றும், அதற்கும் மேற்கே வீடோ, ஊரே கிடையாது என்றால் எங்களுக்கும், எங்கள் பெரியப்பா வீட்டிற்கும் இடம் உள்ளது. உங்கள் பூர்வீக வீடு எங்கு உள்ளது என்றால் சர்வே எண்.652/18 ல் உள்ளது. உங்கள் வீட்டிற்கு சர்வே எண்.652/21 பாதையில் தான் செல்வீர்கள் என்றால் அந்த பாதையிலும் செல்வோம். 652/13 பாதையிலும் செல்வோம். உங்கள் வீட்டிற்கு எதிர் திசையில் சர்வே எண்.652/21 பாதை தான் செல்கிறது என்றால் சரிதான்.

உங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள பாதைக்கு மேற்கே உங்கள் நிலம் தான் உள்ளது என்றால் இல்லை. எனது பெரியப்பாக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. சர்வே எண்.652/13 க்கு மேற்கே தான் எங்கள் நிலம் உள்ளது. உங்கள் தந்தை பெயர் தாத்தார் என்றால் சரிதான். இன்று வரை சொத்து தாத்தார் பெயரில் தான் உள்ளது என்றால் இல்லை, நாங்கள் 3 பேர் வாரிசுகள் உள்ளோம்.

சர்வே எண்.652/13 க்கு மேற்கே உள்ள நிலம் வருவாய் ஆவணங்களின் படி உங்கள் தந்தை பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. எப்போது உங்கள் பெயருக்கு நீங்கள் மாற்றினீர்கள் என்றால் என் அம்மா, தம்பி, என் பெயரில் கூட்டு பட்டா உள்ளது. நீங்கள் உங்கள் சுயநலத்திற்காக தான் பாதை இல்லாத நிலத்தை பாதை இருப்பதாக உங்கள் இடத்திற்கு போக வேண்டும் என்பதற்காக மோசடியாக தாவா சொத்தில் பாதை இருப்பதாக நீதிமன்றத்தை ஏமாற்றி பொய்யாக உத்தரவு பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் பொது மக்கள் பயன்படுத்தும் பாதை கிடையாது என்றும், அந்த இடம் வாதிக்கும், அங்கு இருப்பவர்கள் மட்டுமே பயன்படுத்தும் இடம் என்றும், அது பாதை கிடையாது என்றும், நீங்கள் துர்லாபம் அடைய வேண்டும் என்பதற்காக வாதியின் வீட்டை இடிக்க வேண்டும் என்று மோசடியாக எதிர்வாதம் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல.

வாதியின் முன் உரிமையாளரால் வழங்கப்பட்ட பட்டாவின் அளவில் சொல்லப்பட்டுள்ள இடத்தில் மட்டும் தான் வீடு கட்டியுள்ளார் என்றால்

சரியல்ல. நீங்கள் சரியான முறையில் அளவீடு செய்ய விடாமல் மோசடியாக வாதியின் வீட்டை இடிக்க வேண்டும் என்று முயற்ச்சி செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் அது வண்டி பாதை கிடையாது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து பார்த்ததில் அந்த பாதை வண்டி பாதை கிடையாது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நீங்கள் எந்த வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு உங்களுக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நீங்கள் ஒரு நாளும் பாதையாக பயன்படுத்தியது இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் இது வரை உங்கள் வீட்டிற்கு எதிர்திசையில் உள்ள சர்வே எண்.652/21 ஐ தான் பாதையாக பயன்படுத்தி வருகிறீர்கள் என்றால் சரியல்ல.

இன்று வரை சர்வே எண்.652/21 ஐ தான் பாதையாக பயன்படுத்தி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.652/13 ஐ பாதையாக பயன்டுத்தி வருவதாக நீங்கள் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் சர்வே எண்.652/13 பொது மக்கள் பயன்டுத்தும் பாதை கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக நீங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே இந்த வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**(சாட்சி எந்த கேள்விக்கும் நேரடியாக பதில் சொல்லாமல் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் விதத்திலும், கேள்விக்கு தொடர்பில்லாத பதில்களை குறுக்கு விசாரணை முழுவதும் சொல்லிக்கொண்டே இருந்தார். சாட்சியை இந்நீதிமன்றம் மீண்டும் மீண்டும் அறிவுறுத்தியும் தொடர்ந்து நேரடியாக எந்த கேள்விக்கும் சாட்சி பதில் அளிக்கவில்லை.)**

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor